# சாட்சி ஆதரவு திட்டம்

- எளிதில் பாதிப்படையக்கூடிய சாட்சி என்பவர் யார்?
- இந்த திட்டம் எவ்வாறு செயல்படுகிறது?
- இந்த திட்டத்தின் கீழ் நீங்கள் எளிதில் பாதிப்படையக்கூடிய சாட்சியாக இருந்தால் என்ன எதிர்பார்க்கலாம்
- இந்த திட்டத்திலிருந்து எதை எதிர்பார்க்கக்கூடாது



# சாட்சி ஆதரவு திட்டம்

## முன்னுரை

குற்றவியல் வழக்குகளில் குற்றம் புரிந்தவர் (களுக்கு), அதாவது, குற்றஞ்சாட்டப்பட்ட நபர் (களுக்கு) எதிராக நீதிமன்றத்தில் சாட்சியமளிக்க வேண்டிய எளிதில் பாதிப்படையக்கூடிய சாட்சிகளுக்குச் சாட்சி ஆதரவு திட்டம்[1] ஆதரவு வழங்குகிறது.

இந்த திட்டம், சிங்கப்பூர் சிறுவர் சங்கம் மற்றும் சமூக நீதி நிலையம் போன்ற சமூக சேவை அமைப்புகளின் (SSA) தொண்டூழியர்களால் நடத்தப்படுகிறது.

இந்த திட்டத்தின் கீழ் உள்ள சாட்சிக்கான ஆதரவு, ஒரு தொண்டூழிய ஆதரவு நபர் (VSP) மூலம் வழங்கப்படுகிறது. இந்த VSP என்பவர், SSA-களால் ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட ஒரு தொண்டூழியர் ஆவார்.

இந்த திட்டம் அரசு நீதிமன்றங்களால் ஒருங்கிணைக்கப்பட்டு மற்றும் நிர்வகிக்கப்படுகிறது. இது இலவசமானது.

## எளிதில் பாதிப்படையக்கூடிய சாட்சி என்பவர் யார்?

இந்த திட்டம் நீதிமன்றத்தில் சாட்சியமளிக்க வேண்டிய எளிதில் பாதிப்படையக்கூடிய சாட்சிகளுக்கு உணர்வுபூர்வமான ஆதரவை வழங்குகிறது. அவர்கள் கீழ் வருமாறு வரையறுக்கப்படுகின்றனர்:

> 18 வயதுக்குக் குறைவான சிறுவர்கள் அல்லது 18 வயதுக்குக் குறைவான மனநல ஆற்றல் உடையவர்களாக மதிப்பிடப்பட்ட பெரியவர்கள்;

> 65 வயதுக்கு மேற்பட்ட பாதிக்கப்பட்ட முதியோர்கள்;

> மனநலப் பிரச்சினைகள் இருப்பதாக கண்டறியப்பட்ட சாட்சிகள்;

> புரியப்பட்டதாகக் கூறப்படும் குற்றச்செயல்களின் விளைவாக (எ.டு. வன்முறை சார்ந்த மற்றும்/அல்லது பாலியல் குற்றச்செயல்கள்) பேரதிர்ச்சியான நிகழ்வை அனுபவித்திருக்கக்கூடிய சாட்சிகள்;

> வழக்கு விசாரணையின் போது கடும் மன வேதனையில் இருப்பவரைப் போல காணப்படும் சாட்சிகள்


---

[1] எளிதில் பாதிப்படையக்கூடிய சாட்சி ஆதரவு திட்டத்தைச் சாட்சி ஆதரவு திட்டம் இரத்து செய்கிறது.

## இந்த திட்டம் எவ்வாறு செயல்படுகிறது?

**கீழ்வரும் சாட்சிகள்**

- 18 வயதுக்குக் குறைவான சிறுவர்கள் அல்லது 18 வயதுக்குக் குறைவான மனநல ஆற்றல் உடையவர்களாக மதிப்பிடப்பட்ட பெரியவர்கள்;
- 65 வயதுக்கு மேற்பட்ட பாதிக்கப்பட்ட முதியோர்கள்;
- மனநலப் பிரச்சினைகள் இருப்பதாக கண்டறியப்பட்ட சாட்சிகள்;




- புரியப்பட்டதாகக் கூறப்படும் குற்றச்செயல்களின் (எ.டு. வன்முறை சார்ந்த மற்றும்/அல்லது பாலியல் குற்றச்செயல்கள்) விளைவாக பேரதிர்ச்சி அனுபவித்திருக்கக்கூடிய சாட்சிகள்;
- வழக்கு விசாரணையின் போது கடும் மன வேதனையில் இருப்பவரைப் போல காணப்படும் சாட்சிகள்

**விசாரணை அதிகாரி/அரசு தரப்பு வழக்கறிஞர்/தற்காப்பு வழக்கறிஞர்** பொருத்தமான வழக்குகளை அடையாளம் கண்டு, ஒப்புதல் படிவத்தை www.judiciary.gov.sg/forms/forms-details/wsp-referral இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து, சாட்சியின் பெற்றோர்/காப்பாளர்/பராமரிப்பாளரின் ஒப்புதலைப் பெறுவார்.



**விசாரணை அதிகாரி/அரசு தரப்பு வழக்கறிஞர்/தற்காப்பு வழக்கறிஞர்** பூர்த்திச்செய்யப்பட்ட ஒப்புதல் படிவத்தை அரசு நீதிமன்றங்களுக்கு மின்னஞ்சல் வழி அனுப்புவார்.



**அரசு நீதிமன்றங்கள்**, பொருத்தமான வழக்குகளை ஏற்ற SSA-யிடம் பரிந்துரைக்கும். சாட்சியின் தேவைகளுக்கேற்ப ஒரு தகுந்த VSP நியமிக்கப்படுவார்.

சாட்சிக்கு நியமிக்கப்பட்ட **VSP**, சாட்சியை அல்லது அவரது பெற்றோர்/ காப்பாளர்/ பராமரிப்பாளரைப் (பொருந்துமிடத்தில்) தொடர்பு கொள்வார்.

சாட்சி, அரசு நீதிமன்றங்களுக்குச் சென்று, அந்த சூழலுடன் பழக்கப்படுத்திக்கொள்ள **VSP** ஏற்பாடு செய்வார். மற்றும், நீதிமன்ற நடைமுறைகள் குறித்து அவருக்கு விளக்குவார்.

## இந்த திட்டத்தின் கீழ் நீங்கள் எளிதில் பாதிப்படையக்கூடிய சாட்சியாக இருந்தால் என்ன எதிர்பார்க்கலாம்

> அரசு நீதிமன்றங்களுக்கு ஒரு வருகை (VSP-உடன்), அதை தொடர்ந்து வழக்கு விசாரணையின் போது நீதிமன்ற சூழல் மற்றும் நீதிமன்ற நடைமுறைகள் ஆகியவற்றுடன் உங்களைப் பழக்கப்படுத்த ஒரு விளக்கம்.

> உங்களுடன், மற்றும்/அல்லது உங்கள் பெற்றோர்கள், காப்பாளர்கள் அல்லது பராமரிப்பாளர்களுடன் ஒரு நெருக்கமான மற்றும் இணக்கமான உறவைப் படிப்படியாக உருவாக்க பணியாற்றும் VSP-க்கும் உங்களுக்கும் இடையிலான ஓர் ஆதரவான உறவு.

> VSP நீதிமன்ற நடைமுறைகளைப் பற்றி தகவல் வழங்கும் ஒரு வளமாக இருப்பதோடு, நீதிமன்ற நடவடிக்கைகளிலிருந்து எழக்கூடிய மன அழுத்தத்தைச் சமாளிக்கவும் உதவுவார்.

> வழக்கு விசாரணை நடைபெறும் காலக்கட்டத்தின் போது, நீதிமன்றத்திற்கு உள்ளேயும் அல்லது காணொளி-இணைப்பு வழியாகச் சாட்சியம் அளிக்கும் போது சாட்சியின் அறையிலும் உங்களுக்குப் பின்னால் அமர்ந்து அதரவளிப்பது. இது, அரசு வழக்கறிஞர் அல்லது தற்காப்பு வழக்கறிஞரின் விண்ணப்பத்தின் பேரில் VSP-யை அவ்வாறு செய்ய நீதிபதி அனுமதித்தால் மட்டுமே.

> வழக்கின் முடிவு எவ்வாறு அமைந்தாலும், VSP-யிடமிருந்து தொடர்ந்த உணர்வுபூர்வமான ஆதரவைப் பெறுதல்.

## இந்த திட்டத்திலிருந்து எதை எதிர்பார்க்கக்கூடாது

> வழக்கு விசாரணை தொடர்பான ஆதாரங்களைப்பற்றி VSP-க்கும் உங்களுக்கும் இடையிலோ, அல்லது உங்கள் பெற்றோர்கள், காப்பாளர்கள் அல்லது பராமரிப்பாளர்களுடனோ கலந்துரைக்கப்படக் கூடாது.

> VSP எந்த சட்ட ஆலோசனையும் வழங்கமாட்டார். உங்களுக்கு ஏதேனும் சட்ட ஆலோசனை தேவைப்பட்டால், ஒரு தொண்டூழிய வழக்கறிஞருடன் பேச அரசு நீதிமன்றங்களின் தளம் B1-ல் அமைந்துள்ள சமூக நீதி நிலையத்திற்கு நீங்கள் செல்லலாம்.

> வழக்கு விசாரணைக்கு முன்போ அல்லது வழக்கு விசாரணையின் போதோ, VSP ஆலோசனையோ அல்லது பேரதிர்ச்சிகரமான நிகழ்வுக்குப் பிந்தைய சிகிச்சையோ வழங்கக்கூடாது. எனினும், வழக்கு விசாரணை முடிவடைந்த பிறகு, தகுந்த சூழலில், ஆலோசனைக்காகவோ அல்லது பேரதிர்ச்சிகரமான நிகழ்வுக்குப் பிந்தைய சிகிச்சைக்காகவோ SSA உங்களை ஏற்ற முகமைகளுக்குப் பரிந்துரைக்கலாம்.

## இந்த திட்டத்திற்கான தகுதி வரம்பை நீங்கள் பூர்த்தி செய்தால்

> தயவுசெய்து உங்கள் வழக்கிற்கான விசாரணை அதிகாரியிடம் பேசுங்கள், அதன் வழி அவர் அரசு நீதிமன்றங்களிடம் பரிந்துரையைச் செய்யலாம்.

பொறுப்புத் துறப்பு அறிவிக்கை: இந்த வெளியீடு பொதுவான தகவல் வழங்கும் நோக்கத்துடன் மட்டுமே தயாரிக்கப்பட்டுள்ளதேயன்றி, சட்ட ஆலோசனைக்கு மாற்றாக அல்ல. உங்களின் வழக்கு குறித்து சட்ட ஆலோசனை தேவைப்பட்டால் ஒரு வழக்கறிஞரைக் கலந்தாலோசிக்க வேண்டும். இந்த வெளியீட்டின் பொருளடக்கத்திலிருந்து மற்றும் அதன் தொடர்பாக எழும் ஏதேனும் மற்றும் எல்லா பொறுப்புகளிலிருந்தும் அரசு நீதிமன்றங்கள் மறுப்புரிமை பெற்றுள்ளன.

எல்லாத் தகவல்களும் **1 மார்ச் 2023** தேதிப்படி சரியானவை.

**அரசு நீதிமன்றங்கள்**
1 ஹெவ்லாக் சதுக்கம்
சிங்கப்பூர் 059724
தொலைபேசி எண்: 6 JUSTICE (65878423)
www.judiciary.gov.sg